12.09.2024

அசல் வழக்கு எண்: 239/2019

வா.சா.1 சாட்சி தவமணி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி வாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி

எனது கிரைய ஆவணத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**29.11.2013ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

முத்துலெட்சுமி என்பவரது கிரைய ஆவணத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**04.12.2001ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் அசல் வா.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

பாக்கியவதி என்பவருடைய கிரைய ஆவணத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**05.05.2008ம் தேதியிட்ட கிரைய ஆவணம் வா.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

தாவா சொத்திற்குரிய கணினி சிட்டாவை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**22.11.2019ம் தேதியிட்ட கணினி சிட்டா வா.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

நான் 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**12.11.2019 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பு சார்பு செய்யப்பட்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டையை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி வா.சா.1 குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)**